இந்தியே பொது மொழியாவதற்கு ஏற்ற மொழியாம்

கலைவளம் மிக்கதோர் கவினுடை மொழியாம்

பிறமொழி கலப்பால் மொழிகள் வளருமென்கிருர்

—(0)—

இந்தி மொழிக்கு ஆதரவு தேட அல்லாடியாரின் அர்த்தமற்ற வாதம்

சென்னை, மே 8—

நமது முன்னேர்கள் ஒரு மொழி, மற்றெரு மொழியின் விரோதி என்று கருதினர்களில்லை ஒரு மொழி, மற்றெரு மொழியுடன் கலப்பதால் தீமை இல்லை! ஆங்கிலம் வேறுபல மொழிகளுக்குத் தன்னிடத்தே இடமளித்திருப்பதுபோல, நாமும் நம்முடைய மொழியோடு வேற்று மொழிகள் கலப்பதை ஏற்றுக்கொள்ளும் சக்தி பெறவேண்டும்.

ஒரு அந்நிய மொழி எவ்வளவுதான் பயனுள்ளதாகவும், வலிவுள்ளதாகவும் இருந்தபோதிலும், அது இந்திய மக்களுக்குப் பொதுமொழியாக இருக்க இயலாது. இந்தியே, இந்திய முழுமைக்கும் பொது மொழியாக இருப்பதற்குரியது.

தியாகராயநகரில் ஹிந்தி கலாமந்திரக் கூட்டமொன்றுக்குத்தலைமைவகித்தபோது, தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் மேற்கண்டவாறு திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

அல்லாடியார் ஒரு பெயர் பெற்ற வழக்கறிஞர். வாதத்தில் நிபுணர் என்று அழைக்கப்படுபவர். அப்படிப்பட்டவர் [illegible] பேச்ச[illegible] தான் இந்தியே, இந்திய உப கண்டத்தின் பொதுமொழியாதற்குரியது என்று, ஆதாரங்களுடன் பேச முன்வந்துள்ளார் போலும்! வரட்டும்; அதைத்தான் நாமும் விரும்புகிருேம். அல்லாடியார் வாதம் நீதிமன்றங்களில் மட்டுமே செல்லுபடியாகலாம். ஆனல், மக்கள் மன்றத்திலே அந்த வாதங்கள் தவிடுபொடியாக்கப்படும்.

ஒரு மொழியை, மற்றெரு மொழியின் விரோதி எனக் கருதவில்லையாம் நம்முன்னேர்கள். அய்யர்வாள் நம்முன்னேர்கள் என்று சொல்லுவது, அவரது முன்னேர்களையே குறிப்பதாகும். அவரதுமுன்னேர்கள் ஒரு மொழியை மற்றெரு மொழிக்கு விரோதி எனக் கருதவில்லையாம்! அய்யர்வாள் முன்னேர் யார்? அவர்தம் மொழி யாது? அதன் தன்மை யாது என்பதை ஈண்டு நாம் விளக்கத் தேவையில்லை. அவர்தம் முன்னேர் ஆரியர் என்பதும், ஆரிய மொழி தமிழ் மொழியின் வைரி என்பதும் நாடறிந்த உண்மை.

தனித்தியங்கக்கூடிய தமிழ் மொழியை இன்னும்கூட வடமொழியைகலந்துபேசி, எழுதி வேண்டுமென்றே தமிழை கெடுக்க நினைக்கும் ஒரு சுயநலக் கூட்டத்தைச் சேர்ந்த அல்லாடியார்தான் இத்தகைய அழகுப் பேச்சுபேசுகிருர், இவ்வளவும் எதற்கு? இந்தி மொழியைஇந்நாட்டில்—திராவிடத்தில் பொதுமொழியாக்கி, அதன்மூலம்தமிழ்கெடுவது கண்டு களிக்க!

இதே நேரத்தில் அய்யர் மற்றெரு அழகான வாதத்தையும் நீட்டுகிருர். அந்நிய மொழி எத்துணை சிறப்புடைத்தாயினும், அது இந்திய நாட்டிற்குப் பொது மொழியாக இருக்க அருகதை அற்றது என்கிருர்.

நிரம்ப சரி, அய்யரின் வாதத்தை அப்படியே ஏற்றுக் கொள்[illegible] [illegible] நாடு என இருநாடுகள் உள்ளது என்பதையும், அவ்விரு நாட்டுமொழி, கலாசாரங்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை என்பதையும் அய்யா அறியாரோ! அந்நிய மொழி எத்துணைசிறப்புடைத்தாயினும் அது நமக்கு வேண்டாம் என்று கூறும் அய்யருக்குக்கூறுகிருேம் "அய்யரே தாங்கள் ஏற்றிப் போற்றும் இந்தி மொழியும், திராவிடர்களாகிய எமக்கு அந்நிய மொழியேயாகும். அது எத்துணை பயன்படுவதாயினும், சிறப்புடைத்தாயினும் திராவிடத்தில் அம்மொழி, பொதுமொழியாதற்குத் தகுதி அற்றது" என்கிருேம் இதற்கு என்னபதில் கூறுகிருர் அய்யர் என்று கேட்கிருேம்.

எனவே, அல்லாடியார் வாதம அவருடனேயே, அவரது குழுவினருடனேயேஇருக்கட்டும், இந்நாட்டில் தலைகாட்ட வேண்டாம்—தலைகாட்டக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிருேம்.

மூவர் மாநாடு

லண்டன், மே. 8—

அமெரிக்க ராஜாங்க மந்திரியும், அச்சேஸனும், பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி ஷுமனும் இன்று பாரிஸில் சந்தித்துப் பேசினர்கள். பின்னர் பெவின், அச்சேஸன், ஷுமன் மூவரும் வியாழனன்று லண்டனில் கூடிப் பேசுகின்றனர். இம்மாநாடு சனிக்கிழமைவரையில் நீடிக்கும் எனத் தெரிகிறது.

ஜெர்மனி பிரச்னையை விவாதித்துத் தீர்ப்பதில் இம்மாநாட்டில் சிரத்தை காட்டப்படலாம் என்று தெரிகிறது. (ரூனேம்)

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (9—5—50) வெளியூர் (10—5—50) [இதழ் 247

காங்கிரசை எதிர்க்கக் கட்சி இல்லையாம் நாட்டில்!

எமக்கீடு எவருமில்லையென எக்காளம்

செல்லுமிடமெல்லாம் காமராஜர் கைவரிசை!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் நாடார் தமிழ்நாட்டு இளைஞர் காங்கிரஸை ஆங்காங்கே திறந்து வைக்கும் 'திருப்பணியில்' மிக [illegible]ள்ளார். தமிழ்நாடு [illegible] [illegible]யைய காங்கிரஸ் ஆகிறது [illegible]போலும்! புதிய காங்கிரஸ் புறப்படுகிறது காங்கிரஸ்கிழடுதட்டி, நடமாடவும் தடுமாறுகிறது.

எனவே, வலிவு தேட இளைஞர் காங்கிரஸ்தோற்றுவிக்கப்படுகிறது.

'தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டன்' என்றெரு பழமொழி உண்டு. அதன் உண்மைப் பொருளுக்கு விளக்கமாகக்காணப்படுபவர் நம் காமராஜர்.

எனவே தான், காங்கிரஸ் கட்சிக்குக் கொஞ்சம் வலிவு தேடும் பணியைத் தொடங்கியுள்ள அவர், அதே மூச்சில் எதிர் கட்சிகளைச் சாடவும் செய்கிருர்.

மற்றக் கட்சிகள் எல்லாம் கொள்கையற்று, திட்டமற்று எதற்கும் லாயக்கற்று, மூலையிலே முடங்கும் நிலையை எய்திவிட்டதைப் போலவும், காங்கிரஸ் மாபெரும் சாதனைகளை யெல்லாம் நிறைவேற்றி, வெற்றுமாலை சூடி, விருதுகள் புடைசூழ பவனி வருவது போலவும், கண்திறந்த நிலையிலேயே கணவு கண்டபடி கூறுகிருர். தனது கட்சிக்கு (காங்கிரசுக்கு) வெளிப்படையான எதிர்ப்பு எவ்வளவு வேண்டுமானலும் வரட்டும் வரவேற்கத் தயார் என்று.

நாட்டிலே நடைபெறும் மற்றக்கட்சிகள்யாவும், ஏதோ தலை மறைவாய் இருந்தே தம் பிரசாரத்தை நடத்துவதைப்போல "தைரியமிருந்தால் வெளிவரட்டும், வந்து காங்கிரசைத் தோல்வியுறச் செய்து ஆட்சியை ஏற்றுக் கொள்ளட்டும்" என்று அழைக்கிருர். உண்மையில் நாட்டிலே உள்ள மற்ற ஜனநாயகக் கட்சிகளையும், அவர் தம் கொள்கைகளையும், திட்டங்களையும், நாட்டு மக்கள் அறிந்து கொள்ளாமல் இருக்க, நாட்டாட்சியை நடத்தவந்தோர், பொதுக்கூட்டங்களுக்கு 144, மாநாட்டிற்கு அனுமதி மறுப்பு, நாடகங்கட்குத் தடையுத்தரவு, புத்தகங்கள் பறிமுதல், எழுதியவர் வெளியிட்டவர்கள் மீது வழக்கு, பத்திரிக்கைகட்கு ஜாமீன், ஆட்களுக்கு பாதுகாப்புச் சட்டத்தின மீது சிறைச்சாலை—என்று கொண்டுள்ள எதேச்சாதிகாரப் போக்கால் வேண்டுமானல் மற்றக்கட்சிகள் ஆளவந்தாரின் மறைப்புக்கு ஆட்பட்டிருக்கலாமே தவிர, உண்மையில் எல்லாக் கட்சிகளும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரியாரை காப்பாற்றிய தெய்வம்!

"பீஹார் மந்திரி தெய்வாதீனமாக உயிர் தப்பினர்" என்று தலைப்பொன்று தருகிறது பஞ்சாப் மெயில் விபத்துக்கு "தின மணி".

நாட்டை நடத்திச் செல்பவர்; காந்திய பக்தர், இறந்துவிட்டால் வேறு மந்திரியாரை எங்கே தேடிப் பிடிப்பது; பீகார் எம். எல். ஏ.க்களில் இதனல் கோஷ்டிகள் கிளம்பி விடுமே என்று தெய்வமே பயந்து காப்பாற்றிவிட்டது மந்திரியாரை!

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள்; அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்; பலருக்குக் கையுடைந்துவிட்டது; காலிழந்தவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கும். இவ்வளவு பேரையும் காப்பாற்றவில்லை அந்தத் தெய்வம்! காப்பாற்ற முடியாது என்று நாம் கூறவில்லை; அந்த தெய்வத்துக்கு கருணை இல்லை போலும்!

மந்திரியாரைக் காப்பாற்றியது தெய்வமும் அல்ல; நூறு பேர் உயிரைக்குடித்தது ஆபத்பாந்தவனுமல்ல. மந்திரியார் இஞ்ஜினுக்கு அடுத்த பெட்டியில் இருந்திருந்தால் அந்தத் தெய்வம் அவரைக்காப்பாற்றி இருக்குமா? எல்லாம் சூழ்நிலையின் விளைவுகளேயாகும்

ஜெர்மனிக்கு விடுதலையை தேடித்தந்தது செஞ்சேனையே

—(0)—

பெர்லின் கம்யூனிஸ்டுகள் கொண்டாட்டம்

பெர்லின், மே 8—

ஜெர்மனியை செஞ்சேனைதான் விடுவித்ததென்றும், அதை கொண்டாடவேண்டும் என்றும் கம்யூனிஸ்டு அதிகாரிகள் விடுத்த உத்தரவை, பெர்லின் வாசிகள் நிறைவேற்றவில்லை

ரஷ்யாவில் இன்னும் ஏராளமான ஜெர்மானியர்கள் யுத்தக்கைதிகளாகவே இருந்து வருகின்றனர் என்று, சோஷலிஸ்டு தலைவர்கள் கூறுகின்றனர்.

உலகிலேயே மிக அழகிய மோட்டார்

உலகிலேயே மிக அழகியதெனக் கூறப்படும் மோட்டார் ஒன்று எகிப்து மன்னர் பரூக்கிற்காகத் தற்சமயம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இது மணிக்கு 180 மைல் வேகத்தில் செல்லக் கூடிய இந்த ரோல்ஸ் ராய்ஸ் மோட்டாரைக் கட்ட சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவாகுமாம்.

மாலை மணி

சென்னை 9—5—50 செவ்வாய்க்கிழமை

கண்டிக்கிறோம்

"நூற்றுக்கு மேற்பட்ட பிணங்கள்; கையுடைந்து காலுடைந்து குற்றுயிராகக் கிடந்தவர்கள் நூறுக்கு மேல் இருக்கும்; இறந்தவர்களில் பெண்களே பெரும் பகுதியினராக இருப்பார்கள், இன்ஜினுக்கு அடுத்திருந்த பெட்டி பெண்கள் வண்டியாக இருந்ததால்"

"உயிர் தப்பியவர்கள், இறந்தவர்களின், விபத்தில் படுகாய முற்றவர்களின் பொருள்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள்; வேண்டாமென்று தடுத்துப் பார்த்தேன் நிறுத்தவில்லை; துப்பாக்கிகொண்டு சுட்டுவிடுவேன் என்று பயமுறுத்திய பின்புதான், கொள்ளையை நிறுத்தினர்கள்" என்று கூறினர் பஞ்சாப் மெயில் விபத்தில் சிக்கித் தப்பிப் பிழைத்த பீகார் மந்திரி தோழர் அப்துல் கையும் அன்சாரி.

வண்டி தண்டவாளத்தை விட்டு மட்டும் இறங்கவில்லை, ஐம்பது அடி தூரத்துக்கு அப்பால் சென்று விழுந்ததாம். ஏறிச் சென்றவர்கள் எல்லோரும் இந்தியர்; ஏற்றிச் சென்ற ரயிலும் இந்தியாவுக்குச் சொந்தம்; ஏன் கவிழ்க்கப்பட்டது என்பது, யார் கவிழ்த்தார்கள் என்பதுதான் ஆராய்ச்சிக்குரிய விஷயம். சூளூர்ப்பேட்டைக்கருகில் கல்கத்தா மெயில் கவிழ்ந்தது மார்ச்சு மாதத்தில்; அடுத்து ஏற்பட்டது குமாயுன் எக்ஸ்பிரஸ் விபத்து, நேற்று கவிழ்ந்திருக்கிறது பஞ்சாப் மெயில்.

இந்திய சர்க்கார் தானே; திராவிடத்தை அதிக்கத்துக்குள்ளாக்கியுள்ள சர்க்கார் தானே அடையட்டுமே நஷ்டம் என்று நாம் இருந்து விட முடியாது. திராவிட நாடு இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதியாக உள்ளவரையில், இந்திய சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டத்தால் நாமும் பாதிக்கப்படுகிறோம்; ஆகையால் அந்த சர்க்கார் முட்டாள் தனமாக நடந்து கொண்டால் கண்டிக்கவும், அனுவசியமாக பாதிக்கப்பட்டால்ஆதரிக்கவும்நமக்கு உரிமை உண்டு.

காந்திய வழியில் நிற்பதாகக் கூறிக் கொண்டாலும், தந்திக் கம்பிகளை அறுக்க, தபாலாபீசுகளைக் கொளுத்த, ஓடும் ரயிலைக் கவிழ்க்க மக்களுக்குக் கற்றுக்கொடுத்தவர்கள், காங்கிரஸ்காரர். அவ்வாறு செய்ததால்தான்வெள்ளையனை வெளியேற்றமுடிந்ததென்றும், பின்பு கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டவர்கள். அன்றே நாம் கண்டித்தோம்; ஆகாத செய்கை, மக்களின் போக்கை மாற்றுதீர்கள் என்று; அதே முறைகள் இன்றுகாங்கிரசைக் கவிழ்க்க முயலும் கட்சியாரால் கையாளப்படுகிறது. ஓடும் ரயிலைக் கவிழ்க்கிறவர்கள் தனிப்பட்டோர் என்று நாம் கருதவில்லை, அரசியல் நோக்கம் கொண்டவர்கள் என்றே எண்ணுகிறோம்.

திராவிட முன்னேற்றக்கழகம், பொதுவுடமைக்கொள்கைகளையே மேற்கொண்டுள்ள தென்றாலும், பலாத்காரத்தில் பற்றுக் கொள்ளவில்லை; நாசவேலையில் நம்பிக்கை வைக்கவில்லை. நாட்டு மக்களின் எண்ணத்தில் புரட்சி வேண்டும்; அடிப்படை மாறினால் ஆட்சியைக் கைப்பற்றுவது எளிது என்று கருதுபவர்கள். "பலாத் காரத்தில், நாச வேலையில் நமக்கு நம்பிக்கை இல்லை; செய்யச் சக்தி இல்லை யென்று கூற முடியாது. இரவு 12 மணிக்கு மேல் கொஞ்சம் தூக்கம் வராமல் இருக்க வேண்டும்; காவல் காக்கும் போலீஸ்காரர்கள் தூங்கிவிட வேண்டும்; கவிழ்த்துவிடலாம் எந்த ரயிலையும்; கவிழ்த்துவிட்ட ரயிலை அன்னியனிடம் கடன் வாங்கினலொழிய, நிமிர்த்த முடியாத நிலையில் இருக்கிறோம்." என்று பல முறை கூறியுள்ளோம்

கல்கத்தா மெயில் கவிழ்ந்த போது "இது ஒரு நாசவேலையல்ல; தண்டவாளங்கள் தேய்ந்து விட்டிருந்ததாலும், உபயோகப்படுத்தப்பட்ட இன்ஜின் மிகவும் கனமானதாலும், தண்டவாளம் தானகவே பெயர்ந்துவிட்ட தால் விபத்து ஏற்பட்டது" என்று பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' என்னும் ஆங்கிலவார இதழ் எழுதிற்று. உண்மையில் ரயில் விபத்துகள் நாச வேலைகளால் கவிழ்கின்றனவா, அல்லது ரயிலில் ஏற்பட்டுள்ள கோளாறுகளால் தாக் ஏற்படுகிறதா என்று சர்க்கார் கண்டுபிடித்து; உடனே ஆவன செய்யவில்லையென்பதற்காக நான் சர்க்காரைக் கண்டிக்கிறோம். அடிக்கடி ரயில் விபத்துகள் ஏற்படுவதால் நாட்டில் குழப்பமும், பீதியும் அதிகரிக்குமானல், அன்னியநாடுகள்இச்சர்க்காரை மதிக்காது; சர்வதேச பாங்கி சர்க்காரை மட்டுமல்ல; இந்திய உபகண்டத்தைப் பற்றியே கேவலமாக நினைப்பதோடு, கொடுத்துள்ள கடனை உடனே வட்டி இல்லாமல் கூடத் திருப்பிப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கும். நாட்டு மக்களின் நம்பிக்கை இழந்து, அன்னியரால் அலட்சியப்படுத் தப்படுவதைவிட ஆளத் தெரிந்தவர்களிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, ஆளவந்தார் வெளியேறுவதே தகுந்தமுறையென்று கருதுகிறோம்.

இது ஒரு அரசியல் கட்சியின் செய்கையாகஇருந்தால், எவ்வளவு நல்ல கொள்கைகளை நாட்டில் அவர்கள் பரப்புபவர்களாக இருந்தாலும், நாம் பலமாகக்கண்டிக்கிறோம். சர்க்காரைக் கவிழ்க்க முனைபவர்கள், தண்டவாளத்தின் மீது ஓடும் ரயிலைக் கவிழ்த்துப் பயனில்லை; இதனல் பாதிக்கப்படுபவர்கள் மக்கள்; நஷ்ட மடைவது நாட்டின் செல்வம். ஆகையால், இது போன்ற செய்கைகளைத்திருத்திக்கொண்டு ஆக்க வேலைகளுக்கு ஆவனசெய்ய அவர்கள் முனைய வேண்டுமென்றே கருதுகிறோம்.

கண்டிக்கக் கூடியது மட்டுமல்ல, வேதனை தரககூடிய செய்தியொன்றை மந்திரியார் வெளியிட்டார். உயிரிழந்தவர்களின், கை, கால் உடைந்து குற்றுயிராகக் கிடந்தவர்களின் பொருள்களை; அணிந்திருந்த நகைகளைத் தப்பிப் பிழைத்தவர்கள் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள்; காட்டுமிராண்டித் தனத்திலும் கேவலமபன ஒரு செய்கை அயல் நாட்டன் கேட்டால் அண்டக்கூட விடமாட்டான்; எள்ளி நகையாடி ஏளனம் செய்வான் என்பதை மனதில் வைத்து நாட்டின பண்பைப் பாழ்படுத்தாமல் மக்கள் நடந்துகொள்ளவேண்டும்

உடனடியாகப் பலன் காண முடியாது

டிரிகெவ்லே சந்தேகம்

லண்டன், மே 8—

மூவல்லரசு அயல்நாட்டு மந்திரிகள் மாநாடு, லண்டனில் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் ஐ. நா. காரியதரிசி தோழர் டிரிகெவ்லே மார்ஷல் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பார் என்று தெரிகிறது.

தோழர் டிரிகெவ்லே மாஸ்கோவுக்குப் புறப்படுமுன் கூறுகையில், தன் தூதமூலம் உடனடியான பலன் எதையும் தான் எதிர்பார்க்கவில்லை என்று கூறினர்.

சமீபகாலமாக ரஷ்யா சமரஸத்திற்குத் தயார் என்ற அறிகுறி எதையும் வெளியிடவில்லை

பால்டிக்கில் அமெரிக்க விமானம் சுடப்பட்டது பிரிட்டிஷ் டிராலர் 'எட்ரூரியா' வைக் கைப்பற்றியது. ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கை விஷயமான கொள்கை இவைகளிலிருந்து ரஷ்யா சமரஸத்திற்குத் தயாராகவே இல்லை என்று தெரிகிறது.

கனடாவில் பெருந் தீ விபத்து

தொழில் நகரமே சாம்பல்

டோராண்டோ. மே 8—

கனடாவில் ஊசி இலை மரக்காளி விருந்து நியூஸ் பிரிண்ட், காகிதக் குழம்பு தயாரிக்கப்படும் ஒரு நகரமே தீ விபத்தினுல் பஸ்பமாகியிருக்கிறதென்று [illegible] லின் நஷ்ட[illegible] மும் [illegible] சுமார் 500 குடும்பத்[illegible] உயிருக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடியிருக்கின்றனர்.

ஒவ்வொரு தெருவாக தீ பரவியது என்றும் நூற்றுக்கணக்கானவர்கள் வீடின்றி தவிக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. மிகவும் பிரயாசைப்பட்டு, தீயை அணைக்க முயன்ற போதிலும் நகரத்தில் பேர்பாதிக்கு மேல் நாசமாகிவிட்டது என்றே கூற வேண்டுமாம்

லண்டன், மே 8—

ஹோட்டல்களிடமிருந்து டாலரைப் பெற 5 ஷில்லிங்கிற்கு மூன்று வகை உணவு தான் அளிக்கலாம் என்றிருந்த தடையை பிரிட்டன் நீக்கிவிட்டது.

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

கட்டிட நிதிக்கு

உங்கள் காணிக்கை எங்கே?

ஆர்வ மிகுதியை அன்பளிப்பு மிகுதியால் காட்டுங்கள்!

உடனடித் தேவை 10,000!

ஆக்கவேலைக்கு ஆதரவு தாரீர்!

கடமையைச் செய்வீர்!

களிப்பு அடைவீர்!!

செயற்கை முறையில் சினைப்படுத்தல்

—(0)—

சென்னை சர்க்கார் விஸ்தரிப்புத் திட்டம்

இதுவரை சென்னை, கோயம்பத்தூர், குண்டூர் இம்மூன்று இடங்களில் 700 கால்நடைகளுக்குமேல் செயற்கைமுறையில் சினைப்படுத்தப் பட்டிருக்கிறதென்றும், ராஜபாளையம், தென்கன்னடத்திலுள்ளவர்கள், இத்திட்டம் அவ்விடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர் என்றும், கால்நடை வளர்ப்பு இலாகா கூட்டு டைரக்டர் மேஜர் டி முராரி 'குளோப்' நிருபரிடம் கூறினர்.

சென்னை ராஜ்யத்திலுள்ள காட்[illegible] திட்டத்தை [illegible] ஆ[illegible] கூறினர்.

காட்டுப்பிரதேசங்களில் சிலகுறிப்பிட்ட காலங்களில் ஏராளமான கால்நடைகள் மேய்கின்றனவென்றும் இவைகளுடன் டெக்னிகல் நிபுணர்கள் சென்று செயற்கை சினைப்படுத்தும் முறையை விஸ்தரிக்க வழி செய்வர் என்றும் அவர் திட்டத்தை விளக்கிக் கூறினர்.

சேலம் ஜில்லாவிலுள்ள அன்செட்டியிலும், கர்நூல் ஜில்லாவிலுள்ள நல்ல மலையிலும், கோவை ஜில்லாவிலுள்ள பார்கூர் குன்றுப் பகுதிகளிலும் இம்முறை பின்பற்றப் படும்.

வெவ்வேறு இன காளையையும், பசுவையும் கலக்கச்செய்து பசுக்களிடம் அதிக பால் உற்பத்திச் செய்வதற்கான திட்டம் ஒன்றும் சர்க்கார் ஆலோசனையிலிருக்கிறது என்றும், இம்முறையில் பால் அதிகம் கிடைக்கிறது என்பது தெரியவருகிறது என்றும் அவர் கூறினர்.

ஸிந்தி கால்நடைகளைப் போலவே தோற்றமளிக்கும் கால் நடைகள், ஹோஸீர் பண்ணையில் இருக்கின்றன ஸிந்தி பசுக்களைவிட இப்பசுக்கள் 20% அதிகமாகவே பால் உற்பத்தியை அளிக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

சென்னை கன்றுக்குட்டிகள் இப்போது அதிகம் சாவதில்லை

சமீபகாலமாக கன்றுக்குட்டிகள் சென்னை நகரில் அதிகமாக சாவதில்லை என்று குறிப்பிட்டு அவர் கூறியதாவது:—

முன்பெல்லாம் அதிகமாகக் காணப்படும் வைக்கோல் அடைத்த கன்றுக்குட்டிகள் இப்பொழுது காணப்படுவதில்லை.

சென்னையில் கன்றுக்குட்டிகள் முன்போல் சாகாததற்குக் காரணம், இப்பொழுது பிறக்கும்கன்றுக் குட்டிகள் வெவ்வேறு இன கால் நடைச் சேர்ப்பினல் உண்டானவையானதினல்தான்.

வெவ்வேறு கால்நடை சேர்க்கையால் பால்உற்பத்தி 50% அதிகம் ஏற்படுகிறது.

தேனீ கொட்டினல் நஷ்டஈடு தரவேண்டும்!

லண்டன், மே. 8—

கார்பி என்ற இடத்தில் வசிப்பவர்கள் தேனீ வளர்க்க அனுமதி கோரியபோது அவர்கள் ரூ. 13000க்கு இன்ஷியூர் பாலிஸி எடுத்துக் கொண்டால்தான், தேனீ வளர்க்கலாம் என்று கூறப்பட்டதாம். இத் தேனீக்கள் யாரைக் கொட்டினலும், அவர்களுக்கு நஷ்டஈடு தரவே இத்தொகைக்கான இன்[illegible] செய்யவேண்டும் என்று [illegible]

போலீஸ்காரர்களுக்கு எச்சரிக்கை

காரகாஸ் (வெனிசூலா), மே 8—

பெண்களைப் பார்த்து போலீஸ்காரர்கள் யாராவது சீட்டி அடித்தால் அவர்களுக்கு ஒரு மாத சிறை தண்டனை அளிக்கப்படும் என்று வெனிசூலாவைச் சேர்ந்த மாராகாபோவின் போலீஸ் நிலைய அதிகாரி எச்சரிக்கைவிடுத்திருக்கிறர்.

ஒரு ஆண்டிற்கு முன் இம்மாதிரி உத்திரவு எல்லா ஆண்களுக்குமே இட்டு விதிக்கப்பட்டிருந்தது. ஆனல், பெண்களே இதை ஆட்சேபித்ததினலேயே இது வாபஸ் பெறப்பட்டது.

பறக்கும்போதே பெட்ரோல் போடலாம்

விமானத்தில் புதிய வசதி

லண்டன், மே 8—

பறந்துகொண்டிருக்கும் போதே ஒரு விமானத்திற்கு மற்றொருவிமானத்திலிருந்து பெட்ரோல் போட்டுக்கொள்ளும் முறை சமீபத்தில் பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவ நிபுணர்களுக்குச் செய்து காட்டப்பட்டது. தட்டுத் தவறி சப்ளைசெய்யும் விமானத்துடன் இணைப்பு அறுந்துவிட்டால், பெட்ரோல் சிதறிப்போய் விடாதிருக்க தக்க சாதனம் அமைக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரசை எதிர்க்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறைவிலேயே அல்ல வேலை நடத்துவது.

நடத்துகின்ற பொதுக்கூட்டங்களில், பதினாயிரக் கணக்கில் மக்கள் கூடுவதும், கட்சிக் கொள்கைகள் பேச்சாளர்களால் விளக்கப்படுவதும், பத்திரிகைகளும், புத்தகங்களும் வெளி வந்துகொண்டிருப்பதும், எவ்வளவு, வெளிப்படையாகத் தெளிவாக, மறைவின்றி—திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி வருகிறது என்பதை எடுத்துக்காட்டும், மற்றும் பல கட்சிகளும் நடந்து கொண்டுதான் உள்ளன, வெளிப்படையாக.

என்றாலும், எதிர்க்கட்சியே இல்லாதது போலவும், இருந்தும் வெளிப்படையாக இல்லாதது மறைந்து தாக்குவதாகவும், கம்யூனிஸ்டுகளை சாக்காகக் கொண்டு, பொதுவிலே மாற்றுக் கட்சிகளைச் சாடுவது, கண்ணியமுமல்ல, நேர்மையுமாகாது.

தோழர் காமராஜர், தந்திக் கம்பியிலே நடமாடும் நாரி மணியைப்போல, இப்படிப்பட்ட தந்திரப் பேச்சைக் கொண்டு பொதுமக்களை மயக்கலாம். ஆனால் பொதுமக்கள் தெளிவடைந்து வருகிறார்கள், நீண்டநாள் ஏமாற்றமுடியாது. தந்திர வித்தை பலிக்காதென எச்சரிக்கிறோம். அவருக்கு மட்டுமல்ல அவரையே சாட்சாத் குருவாகக் கொண்டுள்ள அவர் சீட கோடிகளுக்கும் சேர்த்தே.

தமிழ்நாடு முழுவதும் ஓய்வு ஒழிச்சலின்றி, சுழன்று [illegible] பிரசாரத்[illegible] நடத்திவரும் தோழர் காமராஜர், புதிய புதிய கருத்துக்களை அள்ளி வீசி, புரட்சி வீரனாகத் திகழத் திட்டமிட்டு விட்டார்.

இதுவரையில், உலகிலே எந்த அறிஞனும், எந்தச் சந்தர்ப்பத்திலேயும் வெளியிடாத கருத்தை வெளியிட்டு, அதன் மூலம் 'அதிமேதாவி' என்ற பட்டத்தைத் தாங்க தீர்மானித்துவிட்டார் காமராஜர்.

காங்கிரஸில் மேதாவிகள் குறைந்து வருகிறார்கள் என்ற உண்மை நிலையை உணர்ந்து தான்போலும், இந்த 'மேதாவி' தயாராகிறார். எனவே 'மேதாவி' வெளியிடும் கருத்து எதுவானாலும், பொதுஜனங்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக வேண்டுவது மிகவும் அவசரமாகும்.

மேதாவி கூறுகிறார்.

"கம்யூனிஸம் (பொதுவுடமை) எந்தக்காலத்திலும், உலகின் எந்தப் பகுதியிலும் வெற்றிபெறாது. மேலும் இந்தியா கம்யூனிஸத்தைத் தழுவ வேண்டுமென விரும்புவது வீணாசையேயாகும்" கம்யூனிஸம், வெற்றிபெறாது இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலேயும் வெற்றிபெறாது." என்ற தலைவர் காமராஜர் கூறுகிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் இவ்வளவு தெளிவும், அறிவும் பொதுமக்களிடம் வளர்ந்துள்ளகாலத்தில், காமராஜர் கூறுகிறார் பொதுவுடமை வெற்றிபெறாது என்று! அதுமட்டுமல்லபொதுவுடமை பூமியாக விளங்கும் ரஷ்யாவை மறந்து, சிவப்பாகியுள்ள சீனாவை மறந்து, மற்றும் பல கிழக்கு ஆசிய, ஐரோப்பிய நாடுகளை மறந்து, 'மறந்து'—என்று கூறியதற்கு மன்னிக்கவும். மறந்திருக்க மாட்டார், ஏனெனில், மறப்பதற்குத் தெரிந்திருக்க வேண்டுமே—எனவே தெரியாமல், அறியாமல்தான் கூறி இருப்பார். எப்படி அறியாமல் இருக்கமுடியும்? என்று கேட்கத் தோன்றுகிறதா? அவருக்கு அது தெரிந்திருக்கும். ஆனால் மக்களுக்கும் தெரியும் அறிவர் என்பதை. அவர் அறியமாட்டார் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

மக்கள் அறிவர் என்பதை அவர் அறிந்திருந்தால், முழுப்பூசனியைச் சோற்றிலே மறைக்கும் சோதப்பனைப் போல, உலகமே பொதுவுடமைக் கோட்டம், முதலாளித்துவக் கோட்டம் இருகூறாகப் பிரிந்துள்ள நிலையில், மூன்றாவது போர் மூண்டுவிடுமோ என்று அஞ்சவே, பொதுவுடமையின் வெற்றி முழக்கம் காரணமாக உள்ள இச்சமயத்தில், முதலாளித்து நாடுகள் புதுப்புது போர் முறைகளைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டுவரும் செய்திகள் காதில் விழுந்தபடி உள்ள இத்தருணத்தில், இப்படிப்பட்ட பொய்யைக்கூற எப்படித் துணிச்சல் வரும்? எங்கே பிறந்தது அபரிதக் குருட்டுத் தைரியம், அசட்டுவீரம் என்று கேட்கிறீர்கள்? [illegible]

[illegible] வதை நம்பத்தான மக்கள் தகுதி பெறவேண்டுமே தவிர 'மேதாவியின்' உபதேசத்தில் குற்றம் காண்பது முறையல்லவே. எனவேதான், "மேதாவி"யாகிவிட்ட காமராஜ் சொல்வதை நம்புங்கள். சந்தேகிக்காதீர்கள் எனக்கூறுகிறோம்.

மேற்கு ஜெர்மனியின் வாக்காளர் பட்டியல்

பெர்லின், மே 8—

மேற்கு ஜெர்மன் பிரதமர் அடனூர் கிருஸ்தவ ஜனநாயகக் கட்சியின் யோசனைப்படி, மேற்கு ஜெர்மன் வாக்காளர் பட்டியல் பிரிட்டிஷ் மாடலில் அமைக்கப்பட்டால் 15 கம்யூனிஸ்டு மெம்பர்கள் மேற்கு ஜெர்மன் பார்லிமெண்டில் தன் ஸ்தானங்களை இழக்க வேண்டியிருக்குமெனத் தெரிகிறது.

அடனூர் வாக்காளர் பட்டியலைத் திருத்தியமைக்குமுன், நேசநாட்டு ஹைகமிஷனர்களை அவர் கலந்தாலோசிக்கவேண்டியது அவசியம்.

மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு கட்சியையே தடை செய்யவேண்டும் என்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார்.

நியூயார்க்கில் தண்ணீர் பஞ்சம்

உலகத்திலேயே மிகவு பெரிய நகரமாகிய நியூயார்க் தண்ணீரில்லாமல் நெருக்கடியான நிலையை அடைந்துள்ளது. இந்தத் தண்ணீர் நெருக்கடியைப் போக்க செயற்கை மழையை வரவழைக்கப் பெரு முயற்சி நடக்கிறது.

நியூயார்க் நகருக்குத் தண்ணீர் சப்ளை செய்யும் ஏரி உள்ள பகுதியில் மழை பெய்விக்க நோபேல் பரிசு பெற்ற விஞ்ஞானி டாக்டர் இர்விங்லாங்மூர் பெரு முயற்சி செய்து வருகிறார்.

மணமாகாத பெண்களுக்கு!

இந்தியப் பெண்கள் இனிமேல் வெளிநாடுகளுக்கும் சென்று சேவை புரியச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால், அவர்கள் கல்யாணம் ஆகாதவர்களாக இருக்க வேண்டும்.

நூதன சட்டத்தைத் திருத்தி [illegible] பித்துள்ள [illegible] னி [illegible] நாட்டிலாக சே[illegible], பெண்கள் மணம் காதவர்களாகவும், குழந்தை இல்லா விதவைகளாகவும், இருக்க வேண்டும். இவ்வாறு பதவிக்கு நியமிக்கப்படும் பெண், மணம் செய்து கொண்டாலோ, அல்லது மறுமணம் செய்துகொண்டாலோ, தமது பதவியை ராஜினாமா செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

20-5-50

சனி இரவு 9-30 மணிக்கு

தி. மு. கழக

கட்டிட நிதிக்காக

சென்னை

முன்னேற்ற நாடகக் கழகத்தார்

வழக்கு வாபஸ்

கல்சுமந்த கசடர்

அகல்யா

ஆகிய மூன்று நாடகங்களை நடத்துவர்

இடம்:-சௌந்தர்யமஹால் (கோவிந்தப்பநாய்க்கன் தெரு, சென்னை)

கட்டணம் :- ரூ. 5, 3, 2, 1.

கே. கோவிந்தசாமி, டி. எம். பார்த்தசாரதி.

அமைப்பாளர்கள்

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:—

"மாலைமணி" அலுவலகம் சென்னை—1

பஞ்சாப் மெயில் விபத்து

100பேர் மரணம் 100 பேருக்குமேல் அடி

பாட்னா, மே. 8—

சனிக்கிழமையன்று இரவு 2-30 மணிக்கு கல்கத்தா-அம்பாலாவுக்கு மிடையே ஓடும் பஞ்சாப் மெயில், கல்கத்தாவுக்கு 200 மைலுக்கு அப்பால் பெரும் விபத்துக்குள்ளாயிற்று. ஒரு பாலத்துக்குமேல் வண்டி செல்லுகையில், தண்டவாளங்கள் இடம் பெயர்ந்திருந்ததால் சுமார் 50 அடி தள்ளி வண்டி விழுந்துவிட்டது. இதனால் 100 பேருக்குமேல் உயிரிழந்ததோடு சுமார் 100 பேர் காயமடைந்தார்கள்.

இன்ஜின் ஓட்டி குதித்துவிட்டதால் உயிர் தப்பினார். இவருடன் இருந்த மற்ற ஆட்கள் கொல்லப்பட்டார்கள். இன்ஜினுக்கு அடுத்திருந்த பெட்டி சுக்கல் சுக்கலாக உடைந்துவிட்டது. அப்பெட்டி பெண்கள் வண்டியாகும். இதனால் பெண்கள் பலர் உயிரிழந்தனர் என்றும் கருதப்படுகிறது.

விபத்துக்குள்ளான பஞ்சாப் மெயிலில் பிரயாணம் செய்த பீகார் மந்திரி தோழர் அன்சாரி, தப்பிப் பிழைத்தார்.

வண்டியில் இருந்தவர்களில் தப்பியவர்கள், காயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியவர்களின் பொருள்களைச் சூரையாட ஆரம்பித்தார்களாம். மந்திரியார் சுட்டுவிடுவேன் என்று பயமுறுத்தியபின்புதான். சும்மா இருந்தார்களாம்.

ஜெக் ராணுவத்தில் மாறுதல்கள் ?

லண்டன், மே 8—

மூன்று உயர்தர ரஷ்ய ராணுவ அதிகாரிகள் பிரேகிற்குவந்திருப்பதிலிருந்து ஜெக் ராணுவத்தலைமையில் சில புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேமூன்று அதிகாரிகள் 1948ல் வந்தபோது சகைம் ஏற்பட்டு சர்க்கார் மாறியது.

ஏற்கனவேயே கல்வி மந்திரிடாக்டர் நெவ்மெஸியும், மற்றொரு மந்திரி ஹூலாக்கும் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அநேகமாக போலந்தில் செய்யப்பட்டதுபோல ஜெக்கோஸ்லவாகிய ராணுவத்திற்கும் ஒரு ரஷ்ய சேனாபதி நியமிக்கப்படலாம்.

பார்மோஸா மீது உடனே படையெடுப்பு

செஞ்சீனாவின் தீவிர ஏற்பாடு

சியாங் கதி என்ன ஆகுமோ ?

ஹாங்காங், மே 8—

பார்மோஸா மீது படையெடுப்புக்கு ஆயுத்தமாக, புகியன் மாகாணத்தில் ஒரு விமான நிலயத்தை ரஷ்யர்கள் மேற்பார்வையில் சீன கம்யூனிஸ்டுகள் அமைத்து வருகின்றனர் என்று தெரிகிறது.

பூச்சோ, சாங்டிங், அமாம் ஆகிய இடங்களிலுள்ள விமான நிலயங்கள் எல்லாரக விமானங்களுக்கும் பயன்படும்படி விஸ்தரிக்கப்படுகின்றனவாம். கம்யூனிஸ்டுகள் வசம் சுமார் 150 விமானங்கள் தயாராக இருக்கின்றனவாம்.

துருக்கி எதிர்க்கட்சி தலைவர்கைது

அங்காரா, மே 6—

துருக்கி ஜனாதிபதி இஸ்மத் இனானுவுக்கு பலத்த எதிர்ப்பாளரான ஜெனரல் ஸாதிக் அல்டோகான் பார்லிமெண்ட் பிரதிநிதி என்ற முறையில் சர்க்காரை இழிவு படுத்தி துவேஷித்ததாக நேற்றிரவு கைது செய்யப்பட்டார். எதிர்க்கட்சியைச் சேர்ந்த அல்டோகன் நேற்றிரவு ரேடியோ மூலம் தேர்தல் பிரசங்கமொன்றைச் செய்யவிருந்தார். ஆனால் அவருக்குப் பதிலாக அவரது புதல்வி 22 வயதுள்ள பெண், தம் தகப்பனாரின் பிரசங்கத்தை ரேடியோவில்வாசித்து உடன் தந்தை கைது செய்யப்பட்ட விவரத்தையும் அறிவித்தார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

10-5-50

எரிசினம்பட்டி :—ஜி. என். இராஜு.

13-5-50

ஆரணி :—சி. பி சிற்றரசு.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		2301—6—6
வீரப்பன், மீர்சாகிப்பேட்டை, சென்னை		2—0—0
எஸ். எஸ். முத்தியால், பங்களூர்,		1—0—0
மறுமலர்ச்சி நூல்நிலையம், சென்னை		3—0—0
ரேனூர் தி மு. க. செயலாளர்மூலம்		5—10—0
நா. செ. கு. ராஜு,	நாகப்பட்டினம்	1—0—0
சி. சுப்பையா,	,,	1—0—0
டி. ஆனந்தரங்கன்,	,,	1—0—0
கே. வி. கோவிந்தராஜ்,	,,	1—0—0
வி. ராஜமாணிக்கம்,	,,	1—0—0
ஜி. தர்மராஜன்,	,,	1—0—0
ரா. துரைராஜ்,	,,	1—0—0
பெ. பே. ராஜு,	,,	0—8—0
பெ. பே. ராஜாமணி,	,,	0—8—0
மு கோபால்சாமி,	,,	0—8—0
ஆர். சோமசுந்தரம்,	,,	0—8—0
கோ. செல்வராசு,	,,	0—8—0
ஆர். கோவிந்தசாமி,	,,	0—8—0
வி. பி சின்னத்தம்பி,	,,	0—8—0
கே. பி. சோமுராஜ்,	,,	0—8—0
எம். குருசாமி,	,,	0—8—0
க. நடராசன்,	,,	0—8—0
சி. முருகையா, பழனி,	,,	0—8—0
எம். காளிமுத்து, ரா. சோனமுத்து, }	,,	0—8—0
எஸ். பாலகிருஷ்ணன்,	,,	1—0—0
ஒரு அனுதாபி,	,,	1—0—0
அ. சி. ராதாகிருஷ்ணன்,	ஆரணி	1—0—0
மு. ஏ. அப்துல்ஹன்னன்,	,,	1—0—0
ஆர். ராசேந்திரன்,	,,	0—8—0
டி. ஜி. கண்ணப்பர்,	,,	0—8—0
எம். கண்ணப்பன்,	,,	0—8—0
டெயிலர் கே. குப்புசாமி,	,,	0—8—0
ஆ. ந ரங்கநாதன், மு. ர. சீனிவாசன்	,,	0—8—0
எம். கேசவன்,	,,	0—8—0
எம். சிதம்பரம்,	,,	0—8—0
ஆர். கோபால்,	,,	0—8—0
எல். கோவிந்தசாமி,	,,	0—8—0
டெயிலர் சி. செயராமன்,	,,	1—0—0
		2335—8—6

ம. மா. வ. தி. மு. க. செயற்குழு கூட்டம்

23—4—50 ஞாயிற்றுக்கிழமை மாலை மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம், செயலாளர் அவர்கள் இல்லத்தில் நடந்தது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. விளம்பர உறுப்பினர் தோழர் ராஜகோபால் அவர்களின் ராஜினாமா ஒப்புக்கொள்ளப்பட்டு, அதற்கு பதிலாக செவியூரளம் தோழர் முத்தலிப் அவர்கள் விளம்பர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2, பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களின் சுற்றுப் பிரயாண வரவு செலவு கணக்கை ஒப்புக்கொண்டு வரவு ரூ. 725-ல செலவு ரூ 621—10—6 நீக்கி செயலாளர் வசம் இருப்பு ரூ. 103—5—6 இன்னும் வர வேண்டிய ரூ 80 ஆகிய எல்லாவற்றையும்சேர்த்து பொருள் உறுப்பினரிடம் ஒப்புவிப்பது.

3. பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் சுற்றுப் பிரயாணத்தின் போது விட்டுப்போன ஊர்களாகிய, தேனி, போடி, மேலூர் முதலிய ஊர்களுக்கு மாநாடு முடிந்தவுடன் சென்றனுப்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. "திராவிட நாடு" பத்திரிகை ஜாமீன் வழக்கு நிதியை, முன்னேற்றக் கழகக் [illegible] கட்டட [illegible] கொள் [illegible] கேட்டுக் கொள்கிறது.

5. ம. மா. தி. மு க. மாநாடு சோழவந்தானில் நடத்துவதற்கு வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது. முடிவாக செயலாளர் அவர்கள் நன்றிகூற கூட்டம் முடிந்தது.

தா. ஆவுடையப்பன்
செயலாளர் ம. மா. தி. மு. க.
சோழவந்தான்

★ நாட்டு நடப்பு ★

அம்பேத்கார் விழா

திண்டிவனம், ஏப். 15—

செங்காத்தோப்பு திருவள்ளுவர் வாலிப சமாஜத்தினரால் 22-4-50 மாலை, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி.மாணிக்கம் தலைமையில் அம்பேத்காரின் 58 வது பிறந்தநாள்விழா நடைபெற்றது. அதுபோது தோழர்கள் எஸ். துரைக்கண்ணுசெட்டியார், பி. ஆறுமுகம், ஆர். மூக்கிகான்முதலியோர் அம்பேத்கார் செய்யும் அரும்பெரும் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர். பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, தோழர் என். ராமச்சந்திரன் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

முன்னணி மன்றம்

மட்டக்களப்பு. மே 1—

கிழக்கிலங்கையில் எருவூரில் "முன்னணி மன்றம்" என்னும் மன்றம் ஒன்று 1-5-50-ல் அமைக்கப்பட்டது. அரசியல், பொருளியல், சமுதாயம் ஆகிய துறையில் முன்னேறுவதே இக்கழகத்தின் நோக்கம் என முடிவு செய்கிறது.

கீழ்க்கண்ட செயற்குழுவினரை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தனபதி:— கோ. கோணேச பிள்ளை, தலைவர்:— எம். அகமது லெவ்வை, செயலாளர்:-எம். எம். சாலி; துணைச்செயலாளர்:-ஐ. எல். எம். யூசுப், பொருள்உறுப்பினர்:— எம். அலிசாலி

தி. மு. இ. மன்றம்

திருச்செந்தப்பேட்டை, மே 2—

30—4—50 காலை மேற்படி கட்டிடத்தில் தோழர் பி. குமார் தலைமையில் தி.மு. இளைஞர்மன்றம் செயற்குழு கூடியது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்:—பொ. துரையரசு, செயலாளர்:—ச. வைரவன், துணைச் [illegible]:—பி. குமார், விளம் [illegible] செல்லப் [illegible] திராவ [illegible] வினர்:—வா. இராமன், எஸ். ஆ. மாணிக்கம் மு. வைத்தியலிங்கம், அ. சி. குருசாமி, பாண்டியராச, வேலு, வ. வ. கிருஷ்ணன், முனியப்பன். இறுதியில் தோழர் குமார் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

சொற்பயிற்சிக் கழகம்

குளூர், மே 2—

2-5-50 அன்று தோழர் இரா. ச. மணியம் தலைமையில் கலை என்ற தலைப்பில் உறுப்பினர் பலர் கலையின் அவசியம், பயன், நிலைமை பற்றியும், வாழ்விழந்தவனுக்கு வாழ்வை அளிக்கும் கருவியாக கலை பயன்பட வேண்டுமென்றும் பேசினர். தோழர் எஸ். என். அருணாசலம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

தமிழ் இளைஞர் கழகம்

வேளாளத்தேனும்பேட்டை, மே6—

3-5-50-ல் இக்கழகத்தின் புது ஆண்டுத் தேர்தல் தோழர் பத்மநாபன் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:—ஏகாம்பரனூர், துணைத் தலைவர்:— ஏ. கே. அப்துல் லத்தீப், செயலாளர்:— கோ. குருபூசணம், கூட்டுப் பொருளாளர்கள்:— பத்மநாபன், கா. மா. ஏழுமலை மற்றும் 12 பேர்கள் அடங்கிய ஏழைய செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

திருவள்ளுவர் மன்றம்

இலக்குமாங்குடி, மே. 4—

1—5—50 இம்மன்றத் திறப்பு விழாக் கொண்டாட்டம, தோழர் ஜி. ஆர். சந்திரா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், தோழர் திருக்குறள் முனுசாமி அவர்கள் திருவள்ளுவர் மன்றத்தைத் திறந்துவைத்து, சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கை. நெ. தொ. சங்கம்

திருவில்லிபுத்தூர், மே 2—

கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 30-4-50-ல் தோழர் கோ. ராமகுரு தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சமீபத்தில் அமைக்கப்பட்ட கைத்தறிக் கமிட்டியில் எல்லா ஜில்லாவிற்கும் பிரதிநிதித்துவம் கொடுத்ததுபோல், ராமநாதபுரம் ஜில்லாவிற்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமாய் சென்னை அரசாங்கத்தாரை இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

இளங்கோ நாடகம்

மேலக்கழுர், மே. 2—

இவ்வூர் ஆரம்பப் பள்ளி மாணவ மாணவிகளால் இளங்கோ நாடகம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. நாடகத்திற்குத் தலைமை ஆசிரியர் தோழர் கே. சீனிவாசன் அவர்கள் தலைமை வகித்தார். நாடக இறுதியில் தி. மு. க. சார்பில் செயலாளர் தோழர் எம். ஆர். செல்லப்பா பரிசு வழங்கி. கழகத்தின் சிறப்பு பற்றிப் பேசினர். இறுதியாக தோழர் வி. பி. இருதயராஜ் நன்றிகூற நாடகம் இனிது முடிந்தது.

அம்பேத்கார் பிறந்த நாள் விழா

வேலூர், மே, 1—

29—4—50 மாலை சக்காவரம் பெடரேஷன் சார்பாக டாக்டர் அம்பேத்காரின் திருஉருவப்படத்துடன் ஊர்வலம் வந்த பின், தோழர் டீ. செங்காரம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதுபோது தோழர்கள் முனுசாமி கே. பி. தனபால் சே. இராமன், என். கணேசன், எ. செல்வசிகாமணி பி. ஏ. ஆகியோர் "அம்பேத்காரும் தாழ்த்தப்பட்டோரும்" என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றியபின் தோழர் [illegible] கொண்டுவந்த [illegible] பட்டு, [illegible] முடிவுற்றது.

தி. மு. க. வ. சொ. மன்றம்

செம்பொன்னம், மே. 2—

தி. மு. க. வள்ளுவர் சொற்பயிற்சிக் கூட்டம் 30—4—50 அன்று பாவசா இல்லத்தில் நடந்தது. அதுபொழுது புலவர், தோழர் மதிவொளி அவர்கள் தலைமையில் "சமூகத் தொண்டு" என்னும் பொருள் பற்றி தோழர் ன். குமாரசாமி, விசுவநாதன், இராமசாமி, நாகராச, ராஜா உசேன், இராமச்சந்திரன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள். செயலாளரால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

அ. வா, திறப்பு விழா

சேர்க்கனைபம்; மே. 1—

இன்று காலை அறிவிசாமி வாசகசாலைத் திறப்பு விழா நடந்தது. தோழர் க. மணவழகன் தலைமை வகித்தார். தோழர் இல்லவில்லாளன் அஞ்சாநெஞ்சன் அழகிரி படிப்பகத்தின் அவசியம் பற்றியும் அதன் பயன்கள் குறித்தும் தெளிவாகப் பேசி, இயக்கக் கொடியினை ஏற்றிவைத்தார். பின்பு தோழர் சம்பந்தம் பேசினர். தலைவரின் முடிவுரைக்குப்பின், செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

ஆர்ஜெண்டினா பிரஸிடெண்ட் பதவி

லண்டன், மே. 8—

இப்பொழுது ஆர்ஜெண்டினாவில் பிரசிடெண்டாகவுள்ள பெரான். மீண்டும் அப்பதவிக்கு போட்டியிடமாட்டார் என்றும், இப்பொழுது பெரனின் அயர்ஸ் கவர்னராகவுள்ள கர்னல் மெர்காண்டேயை பிரசிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஆதரிப்பார் என்றும் ஆர்ஜெண்டினாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

அவர் அரசியலில் சிரத்தை கொள்ளாவிட்டாலும், தோழியர் மதிபெரான் பேனஸ் அயர்ஸ் கவர்னர் பதவிக்குப் போட்டியிடுவார் எனத் தெரிகிறது. ஆர்ஜெண்டினா நிர்வாகத்தையே ஆட்டிவைக்கக்கூடிய பதவியாம் இக்கவர்னர் பதவி. (ரூனோப்)

நிமிஷத்துக்கு 91,000 சம்பாதித்த நடிகர்

லண்டன், மே 8—

ஒரு வங்கி குமஸ்தாவாக வாழ்க்கையைஆரம்பித்து, பின்னர் எக்ஸ்டிராவாக நடித்து 1928-ல் ஒரு படத்தில் பிரதான நடிகராகதோன்றிய டாக் ஹெல்மோர், மிகக் குறைந்த மணிநேரம் நடித்து அதிகச்சம்பளம் பெற்ற நடிகர் என்பது தெரிய வந்திருக்கிறது.

இவர் சமீபத்தில் ஹாலிவுட் மூன்று வருஷ ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்துவிட்டுஇங்கு திரும்பியிருக்கிறார். இவ்வொப்பந்தத்தின்படி ஒரு வருஷத்திற்கு ரூ. 23,4000 கிடைத்ததென்றும் இவர் மூன்று படங்களில் சில நிமிஷ நேரமே தோன்றியிருக்கிறார். இவருடைய வருமானத்தையும், செய்த வேலை நேரத்தையும் கணக்கிட்டால் ஒரு நிமிஷ நேர நடிப்புக்கு ரூ. 9,1000 என்று கணக்காகிறது.

பென்ஸிலினை விட சிறந்த மருந்து

லண்டன், மே. 8—

பென்ஸிலினைவிட மிகத் திறமையான மருந்து என்று, ஜாமன்வில் ஒரு மெம்பர் புகழ்ந்த 'சி. எம்.' 9 பிரிட்டிஷ் விஞ்ஞானிகளால் உற்பத்திசெய்யப்படுகிறது. இது ஜலதோஷம், இரா தொத்து வியாதிகள்முதலியவைகளைக்குணப்படுத்திவிடுகிறதாம். இது இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

வைத்திய ஆராய்ச்சி கழகங்களுக்கும், சாஜன்களுக்கும் இவ்விஷயமாக ஆராய்ச்சி நடத்த இதன் சாம்பிள் அனுப்பப்பட்டிருக்கிறது.

இதை ஏராளமான அளவில் உற்பத்திச் செய்வதில்கஷ்டங்கள் ஏதுவும் இல்லையாம்.

இம்மருந்து (சி. எம். 9) விஷயமாக பிரிட்டிஷ் சுகாதார மந்திரி காரியாலயத்தினர், வைத்திய நிபுணர்களுடன் கலந்து இதை உபயோகிப்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்துவர்.

இதுவரை இம்மருந்து கால்நடைகள் விஷயத்தில் மட்டுமே உபயோகிக்கப்பட்டு வெற்றி காணப்பட்டிருக்கிறது.

இம்மருந்து உற்பத்திக்காக உற்பத்திச் சாலை ஏற்படுத்த குறைந்தது இன்னும் 6 மாத காலமாகும்.

டாலர் ஸ்டர்லிங்கைபெற ரஷ்யா முயற்சி

லண்டன், மே 8—

ரஷ்யாவும் அதன் ஆதிக்கத்திலுள்ள நாடுகளும் தங்கள் பொருள்களை மிக மிகக் குறைந்த விலைக்கு உலக மார்க்கெட்டில் திணித்து வருகின்றன. ஜெக்கோஸ்லோவியாதான் இதில் மிகவும் முன்னணியில் இருக்கிறது. இதர கிழக்கு ஐரோப்பியநாடுகளும், தங்கள் ஏற்றுமதிகளை விஸ்தரிக்கத் தீவிர முயற்சிகளைச் செய்துவருகின்றன. இப்பொருள்கள் உற்பத்திச் செலவுக்கும் குறைவாகவே விற்கப்படுகின்றனவாம்.

இதன் காரணம், தன் இறக்குமதிகளுக்குப்பணம் தர ரஷ்யாவுக்கு ஸ்டர்லிங்கும் டாலர்களும் வேண்டியிருக்கிறது. டாலர்கள், ஸ்டர்லிங்குகளைப் பெறுவதற்காக தன் பொருள்கள் விஷயத்தில் நஷ்டமடையவும், ரஷ்ய தயாராக இருக்கிறது என்று வர்த்தகபோர்டு அதிகாரி ஒருவர் கூறினர்.

வின்னிபேக்கில் பெரும் வெள்ளம்

பெரும் வெள்ளத்தால் வின்னிபேக் நகரமே அழிந்துவிடும் என்றிருந்த நிலைமையை துருப்புகள் உடைந்த அணையைச் சீர்படுத்திக் காப்பாற்றினர். —ரூனோப்

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.